# ஆற்றுப்படையும் முருகனும்

*முனைவர் மு. பார்வதி*
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை
ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் கலைக்கல்லூரி
திருவைகுண்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958625

## முன்னுரை

நம் பண்டைக்காலத் தண்டமிழ்ச்சான்றோர், அரிய நுண்கலைச் செல்வராய்த் திகழ்ந்திருந்தனர். அவர்கள் உள்ளுவனவெல்லாம் உயர்வையே உள்ளினர். அவ்வாறு உள்ளி உணர்ந்து உணர்ந்து தெள்ளத் தெளிந்த பொருள், முருகு என்பது. இம்முருகு என்னுஞ் சொல்லுக்குக் கடவுட்டன்மை, இளமை, மணம், அழகு முதலிய பொருணிலை கண்டனர். இப்பொருளில் பொதிந்து கிடக்கும் நுண்பொருள் கந்தழி என்னும் கட்டற்ற ஒன்று. அஃதே என்று முள்ள இயற்கை. அவ்வியற்கையே இறைமையென்னும் செம்பொருள் - செழும்பொருள். இவ்வியற்கைக் கனிவைப் - பிழிவை - இறையை, நாட்டினும் காட்டினும் மலையினும் கடலினும் வைத்துப் போற்றினர் நம் பழந்தமிழர் மக்கள். இவற்றுள் மலையில் வைத்துப் போற்றப்பட் டவனே சேயோன் என்னும் முருகு. இம்முருகே முருகன் எனப்பட்டான். முருகன் அழகன்,என்றும் இளையவன். தமிழ்க் கடவுளாகிய முருகனை வணங்கியோர், எல்லா நலன்களையும் பெற்று வாழ்வதை நாம் உணர்வோம். அத்தகைய முருகனின் பெருமையை எடுத்தியம்பும் ஆற்றுப்படைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆற்றுப்படை இலக்கணம்

ஆற்றுப்படை என்ற தொடருக்கு வழியில் செலுத்துவது எனப் பொருள்படும்.இது சங்க காலத்திலிருந்த இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். நீண்ட பாடல் அடிகளைக் கொண்ட தொடர்நிலைச் செய்யுள் வகையைச் சார்ந்தவையாகும். பிற்காலத்தவர் இதனைச் சிற்றிலக்கியங்களில் ஒன்றாகக் கொண்டனர். தொல்காப்பியர் ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளார். புரவலன் ஒருவனைப் பார்த்து பாடி பரிசில் பெற்றுத் திரும்புங்கால், பாணன் ஒருவன் வழியில் வறுமையால் வாடித் துன்புறும் மற்றொரு பாணனைக் கண்டவிடத்துத் தான் பெற்ற பரிசினை அவனுக்கு எடுத்துக் கூறி அவனை அப்புரவலனிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று வளமுடன் வாழ்க எனக் கூறி வழியனுப்புவது போன்று பாடும் இலக்கிய வகையே ஆற்றுப்படையாகும். அக்கலைஞன் கூத்தராகவோ, பாணராகவோ, பொருநராகவோ, விறலியராகவோ இருக்கலாம். தொல்காப்பியர் புறப்பொருளான பாடாண் திணையின் துறைகளுள் ஒன்றாக இவ்வாற்றுப்படையைக் குறிப்பிடுகின்றார்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
**சென்ற பயனெதிரச் சொன்ன பக்கமும்"**
***(தொல். புறத்திணை, இளம். நூற்பா. 90)***

என்று தொல்காப்பியர் ஆற்றுப்படை பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஆற்றுப்படைப் பாக்களில் பாட்டுடைத் தலைவனின் வீரம் மிகுந்து பேசப்படும். பாட்டுடைத் தலைவனின் வாரி வழங்கும் வள்ளட்டன்மையும், கொடைத்திறனும் புகழ்ந்து கூறப்படும். சில பாடல்களில் பாட்டுடைத் தலைவனைக் காணச் செல்லும் வழியைப் பற்றிய வருணனைகள் இடம்பெறும். பொதுவாகக் கூறுமிடத்து ஆற்றுப் படைப் பாக்களில் யாழ் வருணனையும், பாடினி அல்லது விறலியின் வருணனையும் இடம்பெறும். இது கற்போரின் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் தன்மையுடையது. பண்டைத் தமிழரின் இசைக் கலைத்திறனையும், இசை நுட்பத்தினையும், இசை சம்பந்தமான கலைச் சொற்களையும் மற்றும் பிறவற்றையும் அறிந்து கொள்ள ஆற்றுப்படைப் பாக்கள் அமைந்து துணைபுரிகின்றன.

## உலகியலில் ஆற்றுப்படுத்தல்

உலகியலில், ஆற்றுப்படுத்தல் என்ற பண்பாடு படிப்படியாக உயர்ந்து வளர்ந்துள்ளதைக் காணலாம்.

1. இன்ன ஊர் செல்லும் வழி இஃது எனல்.
2. இன்ன பொருள் இன்ன ஊரில் இன்ன இடத்தில் கிடைக்கும் எனல்.
3. இன்னாரிடத்தில் சென்றால் இன்ன பரிசில் தருவார் எனல்.
4. பெறுதற்கரிய பேரின்பத்தைப் பெறுவதற்காகப் பரம்பொருளிடத்தே ஆற்றுப்படுத்தல்.

என்ற படிகளில் ஆற்றுப்படுத்தல் என்னும் உலகியற் செய்கை உயர்ந்து தெய்வீகம் நோக்கிச் செல்வதை அறியலாம். தெரிந்தவர் தெரியாதவர்க்குச் சொல்லுதல் என்ற செயல் மக்கள் வாழ்வில் எல்லாத் துறைகளிலும் அன்றாடம் நடக்கும் சிறிய அருட் செயல் ஆகும்.

"துன்பத்திற்குப் பின்வரும் இன்பம் மிகவும் இனியது" என்று டிரடைன் கூறுவது போல் தெரியாமல் துன்புற்ற நிலை, தெரிந்த பின் இன்புறும் நிலையாகிறது. இந்நிலையில் ஒருவன் தான் தெரிந்து கொண்டதால் பெற்ற மகிழ்ச்சி மற்றவனுக்குத் தெரியப்படுத்தும் போது இரட்டிப் பாகிறது. "தெரிந்தவர் தெரியாதவர்க்குச் சொல்லுதல்" என்ற வாழ்வியற் பண்பு, மனித இனத்தையே ஒருங்கிணைக்கும் அன்புக் கயிறாவதை உணர்கிறோம்.

## சங்ககால இலக்கியங்கள்

சங்ககால இலக்கியங்களாகப் போற்றப் பெற்று வருபவை பத்துப்பாட்டும், எட்டுத் தொகையுமாகும். "பத்துப்பாட்டு" சங்ககால தொகை நூல்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படுகின்றது. இப்பத்துப்பாடல்களும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன அல்ல. அவை வெவ்வேறு கால கட்டத்தில், வெவ்வேறு சூழ்நிலையில் பாடப்பட்ட பாடல்களாகும். பாண்டிய வளநாட்டில் மதுரையம் பதியில் அங்கயற் கண்ணி உடனாகிய சோமசுந்தரக் கடவுள் அருளிய சங்கப்பலகையில் அக்கடவுளோடு ஒப்ப வீற்றிருந்து தமிழை ஆராய்ந்த நக்கீரர் முதலிய எண்மரால் இயற்றப் பெற்ற திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு கடாம் என்னும் பத்தாகும்.

**"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகுவள மதுரைக்காஞ்சி மருவினிய**
**கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி**
**பட்டினப் பாலை கடாத் தொடும் பத்து"**

என்ற ஒரு பழம்பாடல் மூலம் அறியலாம். பத்துப்பாடல்களுள் ஐந்து ஆற்றுப்படை பாக்களாகவே உள்ளன.

## திருமுருகாற்றுப்படை

ஆற்றுப்படைகளில் பெரும்பாலான ஆற்றுப் படுத்துகின்ற, ஆற்றுப்படுத்தப்படுகின்ற கலைஞரின் பெயரையொட்டியே அமைகின்றன. மிகச்சில ஆற்றுப்படைகள் குறிப்பாகத் தெய்வ ஆற்றுப்

படைகள் - பாட்டுடைத் தலைவரின் பெயரால் அமைகின்றன. ஏனை ஆற்றுப்படைகளுக்கு இவ்வுலகத்தே சிறந்த வண்மையாளராய்த் திகழ்ந்த புரவலர்களே பாட்டுடைத் தலைவராக, இப்பாட்டிற்கு உயிர்களின் துயர்போக்கி அந்தமில் இன்பத்து அழியாவீட்டை நல்கியருளும் ஒப்பற்ற வள்ளற் பெருமானாகிய முருக வேலையே சான்றாண்மைமிக்க நல்லிசைப் புலவராகிய நக்கீரர் பாட்டுடைத் தலைவனாகத் தேர்ந்துகொண்டமை பெரிதும் போற்றற்பால தொன்றாம்.

திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டிற்குக் கடவுள் வாழ்த்துப்போன்று அமைந்துள்ளது. இதைப் புலவராற்றுப்படை எனவும் வழங்குவர். 317 அடிகளைக் கொண்டு ஆசிரியப்பாவால் நக்கீரரால் இயற்றப்பட்டது. ஓராறு முகமும் ஈராறு கைகளும் பெற்று விளங்கும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன் குடி (பழநி), திருவேரகம் (சுவாமிமலை), குன்று தோறடல் (திருத்தணிகை), பழமுதிர்ச்சோலை என்னும் இடங்களில் காட்டுகிறார். சூரனை அழித்து ஆட்கொண்ட வரலாற்றினையும் கூறுகிறது. இதை அன்பர்கள் தினமும் பாராயணம் செய்சுய முருகப்பெருமான் அருள் கிடைக்கப்பெறுவது திண்ணம். பன்னிரு திருமுறைகளில் பதினொராந் திருமுறையில் ஒன்றாக விளங்குகிறது. இந்நூல் திருப்புகழ் இயற்றிய அருணகிரிநாதராலும், சீகாளத்திப் புராணம் இயற்றிய சிவப்பிரகாச சுவாமிகளாலும், செய்யுர் பிள்ளைத்தமிழ் இயற்றிய அந்தகக் கவி வீரராகவ முதலியார் அவர்களாலும் பாராட்டப் பெற்றுள்ளது.

## பிற்கால ஆற்றுப்படைகள்

சங்ககால ஆற்றுப்படைகளுக்குப் பின் எழுந்த எல்லா ஆற்றுப் படைகளையும் பிற்கால ஆற்றுப்படைகள் என்று அழைப்பதே பொருத்தம். அம்முறையில் பிற்காலத்தில் எழுந்த ஆற்றுப் படைகள் 44 கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பல, நூல்வடிவினவாகவே உள்ளன. சில கவிதைத் தொகுதிகளிலும், இதழ்களிலும், மலர்களிலும் இடம் பெற்றுள்ளன.அவற்றில் முருகன் குறித்த ஆற்றுப்படைகளைக் காண்போம்.

## பிற்கால முருகாற்றுப்படைகள்

### திருத்தணிகையாற்றுப்படை

திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் முருகனின் மீது கச்சியப்ப முனிவர் பாடியது இந்நூல். 1891இல் இயற்றப்பட்ட இந்நூல் 418 அடிகள் கொண்டது.இறைவன் மீது பாடப்பட்டவனாகக் கிடைக்கும் பிற்கால ஆற்றுப்படை களுள் இதுவே முதலாவதாகும்.

### திருப்போரூர் ஆற்றுப்படை

திருப்போரூர் முருகப்பெருமான் மீது பாடப்பட்டுள்ள இவ்வாற்றுப்படை திரு.வீ.ஏ.முனிசாமிப் பிள்ளை அவர்களால் 1910இல் எழுதப்பட்டதாகும். 272 அடிகள் கொண்ட இந்நூலில் திருக்குறள் முழு வடிவில் இடையிடையே எடுத்தாளப்பட்டுள்ளது.

### அருள் முருகாற்றுப்படை

இவ்வாற்றுப்படை முருகன் வள்ளியை மணமுடித்தது, சூரபன்மனைக் கொன்றது, முருகனின் தோள், முகம் வருணனை ஆகிய பகுதிகளுடன் 69 அடிகளைக் கொண்டுள்ளது. முதலிலும் இறுதியிலும் முருகனைப் போற்றும் வெண்பா உள்ளன. (சித்தாந்தம் 1937 பக். 71-73).

### பொருள் முருகாற்றுப்படை

35 அடிகளைக் கொண்ட இவ்வாற்றுப்படை முருகனைப் போற்றும் முறையில் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் "போற்றி" என முடிகிறது. முதற்பகுதியில் "குமரா", "சிறுவா" என விளிகள் காணப்படுகின்றன. (சித்தாந்தம் 1937 பக். 73-75).

### அணி முருகாற்றுப்படை

முதலில் வெண்பாவுடன் தொடங்கும் இப்பாடல் முருகனது தோற்றப்பொலிவை மிகுதியாக விளக்குகிறது. 41 அடிகளை உடையது. (சித்தாந்தம் 1937 பக். 75-76).

### வருமுருகாற்றுப்படை

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் வெளியிட்டுள்ள இந்நூல் மிகச் சிதைந்த நிலையில் கிடைத்துள்ளது. (முருகர் கதம்பம் ப. 304). நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் டாக்டர் மா.இராசமாணிக்கனார் அவர்கள் தஞ்சாவூர் இரும்புக்கடை வணிகர் பழனிவேற்பிள்ளை இதைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். (ஸ்ரீஞானியாராற்றுப்படை, முகவுரை, III). கிடைத்துள்ள அளவில் இந்நூலில் 76அடிகள்உள்ளன.முருகனைப்போற்றி,“வருக” என்று அழைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இதற்கு “முருகரகவல்” என்ற ஒரு பெயரும் உண்டு எனத் திரு.ந.சி.கந்தையா பிள்ளை அவர்கள் தமிழிலக்கிய அகராதியில் கூறியுள்ளார்.

### சென்னிமலை முருகன் புலவராற்றுப்படை

வறுமையுற்று வாடும் புலவரைச் சென்னி மலை முருகனிடத்து ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ள இந்நூல் 945 அடிகள் உடையது. 1966இல் திரு.வே.ரா.தெய்வசிகாமணி அவர்களால் இயற்றப்பட்ட இந்நூலில் சங்க இலக்கியப் பாங்கில் நானில வருணனைகள் அமைந்துள்ளன.

### திருப்பாணாற்றுப்படை

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் பத்துப் பாட்டு மூன்றாம் பதிப்பின் முன்னுரையில் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்நூல் திருவான்மியூர் உ.வே.சா. நூல்நிலையத்தில் ஓலைச் சுவடியில் சிதைந்த நிலையில் 60 அடிகள் மட்டும் கிடைத்துள்ளன. இவ்வாற்றுப்படை முருகப் பெருமான் மீது இயற்றப்பட்டுள்ளது. (டாக்டர் உ.வே.சா. நூல் நிலையச் சுவடி விளக்கம், தொகுதி-2, ப.743).

### ஆற்றுப்படையை ஒரு கூறாகக் கொண்டுள்ள பிற்காலச் சிற்றிலக்கியங்களில் முருகன் பற்றியது

மேற்கண்ட ஆற்றுப்படைகள் யாவும் ஆற்றுப்படை இலக்கியங்களாகவே எழுந்தவை. இவை தவிர, பிற்காலத்துக் கலம்பகம், மும்மணிக்கோவை, சதகம் போன்ற பிற சிற்றிலக்கியங்களிலும் ஆற்றுப்படை என்ற உறுப்பு அமைந்துள்ளது. எல்லாக் கலம்பகங்களிலும் மும்மணிக் கோவைகளிலும் சதகங்களிலும் ஆற்றுப்படை அமைந்துள்ளது எனக் கூற முடியாது. சிலவற்றில் மட்டுமே இடம் பெறுகிறது. இவ்வாற்றுப்படை உறுப்புகளை மட்டும் தனிப்பாடல்களாக நோக்கினால், அவை சிறந்த ஆற்றுப்படைப் பாடலாகத் திகழ்வதைக் காணலாம்.

### திருவொற்றியூர் முருகன் மும்மணிக் கோவை

திரு.மறைமலையடிகள் இயற்றியுள்ள இம்மும்மணிக்கோவையில், புலவராற்றுப்படை என்ற உறுப்பு 250 அடிகளில் இடம் பெற்றுள்ளது. இதில் உள்ள முருகனைத் துதிக்குமிடங்கள் திருமுருகாற்றுப்படையை நினைவு கூரச் செய்கின்றன. (திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை, ப.41)

### பிற்கால முருகாற்றுப்படைகள் - ஓர் ஒப்பீடு

“ஆற்றெதிர்ப்பட்டதுநன்று” என அருள் பெற்ற அடியான் உரைப்பதாகத் திருத் தணிகையாற்றுப்படையில் மட்டும் உள்ளது. “பெற்ற வளம்” திருப்போரூர் ஆற்றுப்படையில் குறிப்பிடப்படவில்லை. திருப்போரூராற்றுப் படையிலுள்ள “வணங்கும் முறை”, “வாழ்த்தும் முறை”, “கோபுரவாயில் சிறப்பு” ஆகியன திருத் தணிகையாற்றுப்படையில் இல்லை. திருப்போரூர் வருணனையும் திருத்தணிகை வருணனையும் முல்லை, மருதம், குறிஞ்சி ஆகியவற்றின் வளம் கூறும் நில வருணனை அடிப்படையில் அமைந்துள்ளன. “விளித்தல்”, “கேட்பாயாக”, “நாளோலக்கம்”, “பெறும் பரிசில்”, “முருகன் பெருமை” முதலிய கருத்துக் கூறுகள் இரண்டிலும் அமைந்துள்ளன.

“நின்னைப் போலவே யானுமிருந்தேன்”, “நீவிர் வந்த வழி”, “பெற்ற வளம்”, “ஆற்று வருணனை” முதலிய கருத்தலகுகள் திருத்தணிகையாற்றுப்படையில் மட்டும் காணப்படுகின்றன.

திருப்போரூர் வருணனை 125 அடிகளில் அமைந்துள்ளது. (திருப்போரூர் ஆற்றுப்படை

*90-214)*. திருத்தணிகை வருணனை 88 அடிகளில் கூறப்பட்டுள்ளது. (திருத்தணிகை ஆற்றுப்படை *330-418)*. துன்புற்றுப் பலவாறு நினைந்து புலம்பும் இரவலனது தன்மை *166* அடிகளில் திருத்தணிகை ஆற்றுப்படையில் அமைந்துள்ளது. (திருத்தணிகை ஆற்றுப்படை *1-166)*.

## முடிவுரை

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை இறைவனைத் தலைவனாகக் கொண்டு அமைந்திருப்பது போல தெய்வம் இருக்கும் இடத்தை அடையும் நோக்கோடு எழுந்த ஆற்றுப் படை நூல்கள் பல உள்ளன. தெய்வங்கள் உறையும் இடத்திற்குச் சென்று வந்தவர்கள், தாம் பெற்ற அனுபவத்தையும் அருட்செல்வத்தையும் ஏனையோருக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்னும் நோக்குடன் அவற்றை நூல் வடிவில் தந்துள்ளனர். மன்னரைப் பாடும் நிலை தளர்ந்து பின் அவற்றினின்று தெய்வ ஆற்றுப்படைகள் வளர்ச்சி பெற்ற போது ஆற்றுப்படை ஒரு குறிப்பிட்ட கலைஞர்களுக்குரியதாக அல்லாமல் எல்லோருக்கும் பொதுவாயிற்று.முருகனிடம் ஆன்மிக அருள் பெறுவதற்கு வழிகாட்டியாக முருகாற்றுப்படைகள் அமைகின்றன.